# 3, 2, 1 ... பேசுங்கள்!

என் 2 வயது குழந்தை பேசவில்லை, அது வரும் என்று எனக்கு சொல்லப்பட்டது ... நான் கவலைப்பட வேண்டுமா?

1

என் குழந்தை பேசும்போது வார்த்தைகளை சிதைத்து பேசுகிறார், நான் கவலைப்பட வேண்டுமா?

2










என் 3 வயது குழந்தை சரியான வாக்கியங்களை உருவாக்குவதில்லை, நான் கவலைப்பட வேண்டுமா?

3

Tamoul

## மொழி வளர்ச்சி: அடையாளங்கள் மற்றும் எச்சரிக்கை அறிகுறிகள்

# 3, 2, 1 ... பேசுங்கள்!

Neuchâtel-லின் பேச்சுப் பிறழ்வு மருத்துவர் மையத்தின் திட்டம்.

## மொழி வளர்ச்சி: அடையாளங்கள் மற்றும் எச்சரிக்கை அறிகுறிகள்

1 — 2 வயதில் மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், குழந்தை மற்றவர்களுடன் தொடர்புகொள்வது (சைகைகள், அவருடைய வார்த்தைகள்) மற்றும் தன்னை புரிந்துகொள்ளச் செய்கிறது. இது, வரும் மாதங்களில் வேகமாக முன்னேற வேண்டும். நிலைமை மாறவில்லை என்றால், உங்கள் குழந்தை மருத்துவரிடம் பேசுங்கள்.

2 — குழந்தை தன்னைப் புரியவைக்க முடியவில்லை அல்லது அதன் விளைவாக பாதிக்கப்படுகிறார் (அவர் கோபப்படுகிறார், பேச முடியாமல் இருப்பது, தனக்குள் மூடிக் கொள்கிறார்) என்பதென்றால், கவலைப்பட வேண்டும்.

3 — ஆம், 3 வயதில் ஒரு குழந்தை சரியான வாக்கியங்களைப் பயன்படுத்தி சிறிய உரையாடல்களில் பங்கேற்க வேண்டும். பேச்சுப் பிறழ்வு மருத்துவரிடம் அணுக தயங்காதீர்கள்.

Ville de Neuchâtel
ne.ch République et Canton de Neuchâtel
PIC Programme d'intégration cantonal Canton de Neuchâtel

Boudry, La Grande Béroche, Milvignes மற்றும் நகராட்சி ஆதரவுடன்

## 0 - 6 மாதங்கள்

உங்கள் குழந்தை:

- சத்தம் மற்றும் தூண்டுதலுக்கு பதிலளிக்கிறார்
- உங்களை பார்க்கிறார்
- கீச்சிடுகிறார், சிரிக்கிறார்

இந்த நடத்தைகளில் ஒன்றும் இல்லையென்றால் கவனமாக இருங்கள். உங்கள் குழந்தை மருத்துவரிடம் பேசுங்கள்.

தினசரி...

- உங்கள் குழந்தையுடன் அமைதியாக, அன்பாக பேசுங்கள்
- நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்று அவரிடம் சொல்லுங்கள்
- அவருக்கு குழந்தைப் பாடல்கள் பாடுங்கள்
- அவரைச் சுற்றியுள்ள நபர்கள் மற்றும் விஷய-ங்களுக்கு பெயரிடுங்கள்
- அவர் கேட்கும் சத்தங்களை அவருக்கு விளக்குங்கள்

## 6-12 மாதங்கள்

உங்கள் குழந்தை:

- சைகைகளுடன் தொடர்புகொள்வது, எழுத்துக்கள், மழலைப் பேச்சு (பாபாபா, வாவாவா) ஆகியவற்றை மீண்டும் சொல்கிறது மற்றும் சிறிய வார்த்தைகளைப் பயன்படுத்தத் தொடங்குகிறது (பூனைக்கு மியாவ், காருக்கு வ்ரூம், ...)
- பொருள்களைச் சுட்டவும்
- அவர் பெயர் சொல்ல பதிலளிக்கிறது
- சில சொற்களைப் புரிந்துகொள்வது

உங்கள் குழந்தை சைகைகள் அல்லது ஒலிகளால் தொடர்பு கொள்ளாவிட்டால் அல்லது அவர் சத்தமிடுவதை நிறுத்தினால் கவனமாக இருங்கள்.

தினசரி...

- உங்கள் குழந்தையால் உருவாக்கப்பட்ட சைகைகள் மற்றும் ஒலிகளைப் பின்பற்றி மீண்டும் செய்யவும். இந்த சைகைகள் மற்றும் ஒலிகளைப் புரிந்துகொள்ள விளக்குங்கள் → “முடிந்துவிட்டதா ?”, “இன்னும்?”, “போய்ட்டு வாரேன்!”
- உங்கள் தினசரி நடவடிக்கைகளின் போது (குளித்தல், பொருட்களை வாங்குதல், உணவு, உடை,...) உங்கள் குழந்தையுடன் தொடர்ந்து பேசுங்கள்.
- அவரிடம் கதைகளைச் சொல்லுங்கள் (நிறைய படங்கள் உள்ள புத்தகங்கள், துணி புத்தகங்கள் கொண்ட எளிய புத்தகங்கள்)

## சுமார் 18 மாதங்கள்

உங்கள் குழந்தை:

- சில அடையாளம் காணக்கூடிய வார்த்தைகளைச் சொல்கிறார், எல்லா பழக்கமான சத்தங்களையும் அங்கீகரிக்கிறார் (தொலைபேசி ஒலித்தல், கதவு திறத்தல், ...)
- சைகைகள் இல்லாமல் குறுகிய வாக்கியங்களைப் புரிந்துகொள்கிறார் → "அப்பா எங்கே?", "போய் உங்கள் பொம்மையை தேடுங்கள்", "உங்கள் போச்சி என்னிடம் கொடுங்கள்."

கவனமாக இருங்கள்:

- அவர் 18 மாதங்களில் தனது முதல் வார்த்தைகளைச் சொல்லவில்லை
- அவர் அன்றாட சொற்களையும் சைகைகளையும் தன்னிச்சையாகப் பின்பற்றுவதில்லை (கையால் தாத்தா காட்டுவது, ...)

தினசரி...

- அவரிடம் கதைகளைச் சொல்லி பாடல்களைப் பாடுங்கள்.
- "குழந்தைப் பேச்சை" தவிர்க்கவும், சாதாரண வாக்கிய-ங்களையும் துல்லியமான வார்த்தைகளையும் பயன்படுத்தி அவரிடம் சாதாரணமாக பேசுங்கள்.
- தினசரி பொருள்கள், செயல்கள் மற்றும் உணர்வுகளை எளிய விளக்க வார்த்தைகளில் பெயரிடுங்கள்
- குடும்பத்திற்குள் அவரை கலந்துரையாடல்களில் ஈடுபடுத்துங்கள்
- இரண்டு சாத்தியக்கூறுகளிலிருந்து தேர்ந்தெடுக்கு-ம்படி அவரிடம் கேளுங்கள் → "உங்களுக்கு வாழைப்பழம் அல்லது ஆப்பிள் வேண்டுமா?"

## சுமார் 2 வயது

உங்கள் குழந்தை:

- மேலும் மேலும் புது வார்த்தைகளைச் சொல்கிறார்
- குறுகிய இரண்டு வார்த்தை வாக்கியங்களை உருவாக்கத் தொடங்குகிறார் → "அப்பா போய்விட்டார்"
- "சோஃபிக்கு ஒரு குக்கீ கொடுங்கள்" போன்ற சிக்கலான வரிசையைப் புரிந்துகொள்கிறார்."
- "நான்" மற்றும் "நீங்கள்" பயன்படுத்துகிறார்

கவனமாக இருங்கள்:

- அவரது சொற்களஞ்சியம் 50 வார்த்தைகளுக்கு குறைவாக உள்ளது மற்றும் புதியவற்றைக் கற்று-க்கொள்வதில் சிக்கல் இருந்தால்
- உங்கள் குழந்தை இன்னும் இரண்டு சொற்களை இணைத்து குறுகிய வாக்கியங்களை உருவாக்கவி-ல்லை

தினசரி...

- அவர் தவறாக உச்சரித்தால், அவரை மீண்டும் சொல்லக் கேட்காமல் சரியான வார்த்தையைச் சொல்லுங்கள்
- நீங்கள் அவருடன் நீண்ட வாக்கியங்களில் பேசலாம்
- சுதந்திரத்திற்கு அவரை ஆதரிக்கவும் (உணவு, உடை,...)
- அடிக்கடி வந்தாலும் அவருடைய கேள்விகளுக்கு பதில் சொல்லுங்கள் → "இது என்ன?", "ஏன்?"
- உங்கள் குழந்தையை அவரது கட்டைவிரல் அல்லது வாயில் ஒரு முலைக்காம்புடன் பேச விடாதீர்கள்.

## சுமார் 3 வயது

உங்கள் குழந்தை:
- வாக்கியங்களில் பேசுகிறார் மற்றும் குடும்ப உரையாடல்களில் பங்கேற்கிறார்
- கேள்விகள் கேட்கிறார்
- சிறுகதைகளை கேட்டு புரிந்து கொள்கிறார்
- "நான்" மற்றும் "நீங்கள்" பயன்படுத்துகிறார்

கவனமாக இருங்கள்:
- உங்கள் குழந்தை வாக்கியங்களை உருவாக்கவில்லை
- அவர் தனியாக ஒரு உரையாடலைத் தொடங்குவதில்லை
- அவரது குடும்ப நபர்களை தவிர வெளி நபர்கள் புரிந்து கொள்வது கடினம்


தினசரி...
- அவரிடம் கேள்விகளைக் கேட்டு வெளிப்படுத்த ஊக்குவிக்கவும் (எங்கே?, எப்போது?, யார்?)
- அவர் தனது சூழலைக் கண்டறியப்படுத்துங்கள் (பூங்கா, விளையாட்டு மைதானங்கள், பண்ணை, தபால் அலுவலகம், மிருகக்காட்சிசாலை போன்றவை)
- அவருடைய புரிதலை வளர்க்க நீங்கள் சொல்லும் கதைகள் பற்றி அவரிடம் ஒரு கேள்வி அல்லது இரண்டு கேள்விகள் கேளுங்கள்.
- பகலில் படிப்படியாக லாலட்டை நிறுத்துங்கள்
- உங்கள் குழந்தை முழுமையாக முடிக்காத வாக்கியத்தை மறுபெயரிடாமல் சரியான வடிவத்தைக் கொடுக்கவும் → "எனக்கு வேண்டும் ஜூ", "ஆ, உங்களுக்கு பழச்சாறு வேண்டுமா? நான் உனக்கு தருகிறேன்"

## சுமார் 4 வயது

உங்கள் குழந்தை:
- சரியான வாக்கியங்களை உருவாக்குகிறார்
- சிக்கலான வாக்கியங்களை உருவாக்குகிறார் (ஏனெனில், மற்றும்...)
- நிகழ்வுகளை சரியான நேரத்தில் (முன், பின், நேற்று, நாளை,...) மற்றும் இடத்தில் (உள்ளே, மேல், கீழ்,...) கண்டுபிடிக்கத் தொடங்குகிறார்.

கவனமாக இருங்கள்:
- தடுமாற்றம் நீண்ட நேரம் அமைகிறது
- அவரது வாக்கியங்கள் மோசமாக கட்டப்பட்டுள்ளன
- அவரது மொழி எப்போதும் புரிந்துகொள்ள முடியாது
- எளிய மற்றும் சமீபத்திய நிகழ்வுகளை உங்களுக்குச் சொல்வதில் அவருக்கு சிக்கல் உள்ளது

தினசரி...
- வரவிருக்கும் நிகழ்வுகளைக் கண்டுபிடிக்க ஒரு காலெண்டரைப் பயன்படுத்தவும் → "பாருங்கள், புதன்கிழமை நீங்கள் அம்மம்மாவிடம் செல்கிறீர்கள்"
- உங்கள் பரிமாற்றங்கள் செறிவூட்டப்பட்டுள்ளன, அவருடன் விவாதிக்க நேரம் ஒதுக்குங்கள்
- சிறிய பலகை விளையாட்டுகளை விளையாடுங்கள் (லோதோ, நினைவகம், பலகை விளையாட்டுகள்)



## மேலும் செல்ல

பயனுள்ள இணைப்புகள்:

- Neuchâtel பேச்சுப் பிறழ்வு மருத்துவர் மையம்: www.neuchatelville.ch/orthophonie
- Tutolangage காணொளிகள்: www.neuchatelville.ch/orthophonie
- பிரஞ்சு பேசும் பேச்சுப் பிறழ்வு மருத்துவர் சங்கம்: www.arld.ch
- Neuchâtel மாநிலத்தின் பேச்சுப் பிறழ்வு மருத்துவர்களு-டைய சுயாதீனமான சங்கம்: lecolin.ch

பயனுள்ள முகவரிகள் :

- www.bibliomonde.ch
- www.bibliotheque-pestalozzi.ch
- www.bibliobus-ne.ch
- www.lacourteechelle.ch
- www.recifne.ch/espace-enfants
- www.ilotmots.ch
- www.croix-rouge-ne.ch

“3, 2, 1 … பேசுங்கள்!” Neuchâtel -லின் பேச்சுப் பிறழ்வு மருத்துவர் மையத்தின் திட்டம். மேலும் தகவலுக்கு அல்லது எங்கள் சிற்றேடுகள் மற்றும் சுவரொட்டிகளை பெற்றுக்கொள்வதற்கு:
centre.orthophonie.neuchatel@ne.ch / 032 717 78 20
வரைபட விளக்க வடிவமைப்பு: hilti+rebmann / Illustrations: ANDA
ஆடி 2020-இல் அச்சிடுதல் முடிந்தது.

# 3, 2, 1 … பேசுங்கள்!

திரைகளைப் பார்ப்பது மொழி வளர்ச்சிக்கு தடையாக இருக்கும்.

1

நான் நன்றாக பிரஞ்சு பேசா-விட்டாலும், என் குழந்தையுடன் நான் பிரஞ்சு பேச வேண்டுமா?

1




என் குழந்தை இரண்டு மொழி-களைப் பேசுவார், அதனால் தான் அவன் பிரஞ்சை மோசமாகப் பேசுகிறானா?

2

ஒரு குழந்தை இளம் வயதிலேயே இரண்டாவது மொழியைக் கற்றுக்கொண்டால் அதை நன்றாகக் கற்றுக்கொள்வா-னா?

3

கணிப்பலகை குழந்தையின் மூளையை அணைக்கிறது.

2




ஒரு நாளைக்கு ஒரு மணி நேர கணினித் திரை பார்ப்பது, அதுவே அதிகம்!

3

"3, 2, 1 … பேசுங்கள்!" குழந்தைகளின் மொழி வளர்ச்சி சம்பந்தமான 3-பகுதி உல்ல திட்டம். மேலும் அறிய, "இருமொழி" மற்றும் "திரை மற்றும் மொழி" ஆகிய கருப்பொருள்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட எங்கள் இரண்டு சிற்றேடுகளையும் கண்டறியவும்.

## இருமொழி

1. இல்லை, உங்கள் குழந்தையுடன் தாய் மொழி பேசுவது முக்கி-யம், ஏனென்றால் அது பிரெஞ்சு வளர்ச்சிக்கு உதவும்.
2. இல்லை, இருமொழி ஒரு மொழி பிரச்சனைக்கு காரணம் அல்ல. அவர் பயன்படுத்தும் இரண்டு மொழிகளில், குழந்தை-யைப் பற்றி பேசுவது நமக்கு கடினமாக இருக்கும். மொழி கோளாறு இல்லாத குழந்தை எந்த பிரச்சனையும் இல்லாமல் இரண்டு மொழிகளைக் கற்றுக்கொள்ளும்.
3. இல்லை, வயது முக்கியமல்ல, வெளிப்பாட்டின் அளவு தான் முக்கியம். ஒரு குழந்தை ஒரு மொழியை எவ்வளவு அதிகமாகக் கேட்கிறதோ, பேசுகிறதோ, அவ்வளவு சிறப்பாக அவன் அதைக் கற்றுக்கொள்வான்.

## திரை மற்றும் மொழி

1. 4 வயதுக்கு முன், ஒவ்வொரு நாளும் திரைகளைப் பார்ப்பது மொழி தாமதத்தின் அபாயத்தை பெரிதும் அதிகரிக்கிறது.
2. ஒரு திரைக்கு முன்னால், குழந்தையின் கவனம் அதிகமாகவும் இருந்தாலும், மூளை புதிய சொற்களைக் கற்றுக்கொள்வது மிகவும் குறைவாகவே இருக்கும்.
3. குறிப்பாக 12 வயதிற்கு முன்பே, குழந்தையுடன் மற்ற செயல்பா-டுகளில் ஈடுபட்டு அவருடைய மொழி வளர்ச்சியை ஊக்குவிக்க வேண்டும்.